DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.26/2018**

Prosecution witness **PW.9 (LW.9)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Jeyamurugan (Inspector Retired) | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(Accused present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **27.02.2026**

**27.02.2026 முதல் விசாரணை** :

1. நான் காவல்துறையில் உதகை மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூரில் குடியிருந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு மேல்குன்னூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது எனக்கு முன்பு பணியிலிருந்த ஆய்வாளர் அ.சா.8 திரு.சக்திவேல் அவர்கள் தனது முதல் புலன் விசாரணையை முடித்து வைத்திருந்த நிலைய குற்ற எண்.16/2017 இதச பிரிவுகள் 465, 468, 420, 471, 511 ன் படியான வழக்கு கோப்பினை 27.06.2017ம் தேதி எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் கண்ணன், பாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்த போது ஏற்கனவே ஆய்வாளரிடம் கூறியது போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

3. பின்னர் 22.08.2017ம் தேதி சாட்சிகள் மணி, பன்னீர்செல்வம், சிவானந்தம், சங்கர் கணேஷ் ஆகியோர்களை விசாரித்த போது ஏற்கனவே ஆய்வாளரிடம் கூறியது போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. 23.08.2017ம் தேதி 1ம் எதிரி

மனோகரனை நிலையம் அழைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.09.2017ம் தேதி காவலர் அ.சா.6 ஆனந்தை விசாரித்த போது ஏற்கனவே ஆய்வாளரிடம் கூறியது போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

4. வழக்கின் மற்றொரு எதிரியான விஸ்வநாதனை கைது செய்யும் பொருட்டு தனிப்படை அமைத்து தேடி வந்த நிலையில் எதிரி தலைமறைவாக இருந்ததால் அவரை கைது செய்யவில்லை. எனவே எனது புலன் விசாரணையை முடித்து 2ம் எதிரியை தலைமறைவு எதிரியாக காட்டி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 465, 468, 420, 471, 511 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் புலன் விசாரணைக்கு வழக்கை எடுத்துக்கொண்ட போது வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் ஆம், ஒப்படைக்கப்பட்டது. குற்ற இறுதி அறிக்கையுடன் வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டேனா என்றால் ஆம், தாக்கல் செய்துவிட்டேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு வழக்கிற்கு தேவையான ஆவணங்களை இணைத்து நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. மேல்குன்னூர் காவல் நிலையத்தில் நான் ஆய்வாளராக 26.07.2017ம் தேதி சேர்ந்தேன். 2019ம் வருடம் மேற்படி காவல் நிலையத்திலிருந்து குன்னூர் நகர் காவல் நிலையத்திற்கு மாறுதலாகி சென்றேன், ஆனால் தேதி, மாதம் ஞாபகமில்லை. அ.சா.1 கண்ணன், அ.சா.4 சிவானந்தம், அ.சா.7 சங்கர்கணேஷ், அ.சா.8 ஆய்வாளர் திரு.சக்திவேல் ஆகிய சாட்சிகளை எங்கு வைத்து எப்போது விசாரித்தேன் என்றால் அ.சா.1 கண்ணன் மற்றும் அ.சா.4 சிவானந்தம் ஆகியோர்களை 26.07.2017ம் தேதி குன்னூர் TANTEAஅலுவலகத்தில் வைத்து விசாரித்தேன். அ.சா.7 சங்கர் கணேஷை உதகையிலுள்ள யூகோ வங்கியில்

வைத்து விசாரித்தேன், ஆனால் தேதி ஞாபகமில்லை. அ.சா.8 ஆய்வாளர் சக்திவேல் அவர்களை போனில் விசாரித்தேன், ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

3. எந்தவொரு சாட்சியின் வாக்குமூலத்தையும் நான் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றும், சாட்சிகள் அ.சா.1, அ.சா.4, அ.சா.7, அ.ச.8 சாட்சிகளை நான் தான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக அவர்களது வாக்குமூலத்தில் எனது கையொப்பம் கண்டுள்ளது என்றால் அ.சா.8 சாட்சியை தவிர மற்ற சாட்சிகளை நான் தான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். பதிவு செய்து நீண்ட காலம் ஆகிவிட்டதால் தவறுதலாக பதிவு செய்யவில்லை என்று கூறிவிட்டேன்.

4. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்தவொரு சாட்சியையும் விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே ஆய்வாளர் சக்திவேல் அவர்கள் தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் கையொப்பம் மட்டும் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.5 பன்னீர்செல்வத்தை நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, நேரடியாக தான் விசாரித்தேன். அ.சா.5 சாட்சியை வங்கியில் வைத்து விசாரித்த போது வங்கியின் சிசிடிவி பதிவுகளை நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை.

5. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2026.02.27 02:26:36 +0530

JUDICIAL MAGISTRATE,
COONOOR.